


13.04.2025

தலைப்பு செய்திகள்

- தமிழ் புத்தாண்டு மற்றும் பைஷாகியை முன்னிட்டு குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு.ஜெக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திரமோடி உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
- நாட்டிற்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் இளைஞர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றுவதன் அவசியத்தை மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.
- தமிழகத்தில் கோவில்களின் வைப்புத்தொகை வருமானத்தை கொண்டு திருப்பணிகள் விரைந்து முடிக்கப்படும் என மாநில அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.
- கிறிஸ்தவர்களின் தவக்காலத்தின் முக்கிய நிகழ்வான குருத்தோலை ஞாயிறு இன்று கடைப்பிடிக்கப்படுகிறது.
- ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் ஜெய்ப்பூரில் பிற்பகல் மூன்றரை மணிக்கு ராஜஸ்தான் ராயல்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருவை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

தமிழ் புத்தாண்டு

தமிழ் புத்தாண்டு மற்றும் பைஷாகியை முன்னிட்டு குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு.ஜெக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திரமோடி உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் பைஷாகி, விஷு, பிஹு, மேஷாதி உள்ளிட்ட பெயர்களில் இன்றுமுதல் 3 நாட்களுக்கு புத்தாண்டு கொண்டாடப்படும் நிலையில் வேற்றுமையில் ஒற்றுமை என்ற நமது உயரிய சமூக பாரம்பரியத்தை இவை வெளிப்படுத்துவதாக குடியரசு தலைவர் தெரிவித்துள்ளார்.

அனைவருக்கும் உணவளிக்கும் வேளாண் பெருமக்களுக்கு இந்நாளில் நன்றி செலுத்துவதுடன் நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்போம் என்றும் அவர் கூறியுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் விடுத்துள்ள செய்தியில் வளம், புத்தாக்கம், ஒருங்கிணைப்பு உள்ளிட்டவற்றை இந்நாள் வலுப்படுத்தட்டும் என வாழ்த்தியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் அனைவரது வாழ்விலும் புதிய நம்பிக்கை மகிழ்ச்சி, ஒற்றுமை உள்ளிட்டவைகளை இந்நாள் அதிகரிக்கட்டும் என கொண்டுவரட்டும் என வாழ்த்தியுள்ளார்.

❖❖❖❖❖❖

பிரதமர் - ஹரியானா

ஹரியானா மாநிலம் யமுனா நகரில் பாரத் மாலா திட்டத்தின்கீழ் ஆயிரத்து 70 கோடி ரூபாய் மதிப்பிலான ரிவெரி புறவழிச்சாலை திட்டத்தை பிரதமர் நாளை தொடங்கிவைக்கிறார்.

ஹிசாரில் 410 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய விமானமுனைய கட்டுமான பணிகளுக்கு அடிக்கல் நாட்டும் அவர், ஹிசார் அயோத்தியா இடையேயான முதல் விமான சேவையையும் துவக்கிவைக்கிறார்.

தொடர்ந்து பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் பிரதமர், எரிசக்தி, உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 800 மெகாவாட் நவீன அனல்மின் நிலைய பணிகளையும் தொடங்கிவைக்கிறார்.

❖❖❖❖❖❖

பிரதமர் - ஜாலியன் வாலாபாக்

ஜாலியன் வாலாபாக் படுகொலை நினைவுநாள் இன்று அனுசரிக்கப்படுகிறது

இந்நாளையொட்டி பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் சுதந்திர போராட்டத்திற்கு வித்திட்ட தியாகிகளை இளம் தலைமுறையினர் என்றென்றும் நினைவுகூறுவதாக தெரிவித்துள்ளார்.

நாட்டின் வரலாற்றியில் ஜாலியன் வாலாபாக் நிகழ்வு இருண்ட அத்தியாயம் என்று குறிப்பிட்ட பிரதமர், சுதந்திர போராட்டத்தின் முக்கிய திருப்புமுனையாக அமைந்ததாகவும் கூறியுள்ளார்.

1919-ம் ஆண்டு இதேநாளில் பஞ்சாப் அமிர்தசரஸில் பொதுக்கூட்டத்தில் பங்கேற்ற இந்தியர்கள் 379 பேர் அப்போதைய ஆங்கிலேயே அதிகாரி ஜென்ரல் டயரின் உத்தரவால் சுட்டுகொல்லப்பட்டனர்.

❖❖❖❖❖❖

மன்சுக் மாண்டவியா

இளையோர்கள் இந்திய அரசியலமைப்பின் மாண்புகளை மதித்து பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை மத்திய இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

அரசியல் சாசன சிற்பி டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் பிறந்தநாள், நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி பாட்னாவில் ஜெய்பீம் யாத்திரையை இன்று தொடங்கி வைத்து பேசியஅவர், அண்ணல் அம்பேத்கரின் சமத்துவம், நீதி சகோதரத்துவ கொள்கைகளை பின்பற்றி வளர்ச்சியடைந்த இந்தியாவை இளைஞர்கள் உருவாக்க வேண்டுமென்றார்.

நாட்டிற்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் ஒருங்கிணைந்து பணியாற்றுவதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய அமைச்சர், வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான இயக்கத்தில் இதுவரை ஒருகோடியே 75 லட்சம் இளைஞர்கள் இணைந்துள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

முதலமைச்சர் - அம்பேத்கர்

தமிழ்நாட்டில் டாக்டர் அம்பேத்கரின் பிறந்தநாள் சமத்துவ நாளாக நாளை கொண்டாடப்படவுள்ளதை அடுத்து முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் 332 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை 49 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு சென்னையில் வழங்க உள்ளார்.

புதிய விடுதி கட்டிடங்கள் உள்ளிட்டவற்றையும் முதலமைச்சர் திறந்துவைக்கிறார்.

❖❖❖❖❖❖

பியூஷ் கோயல்

நாட்டில் இறக்குமதி சார்பு நிலையை குறைத்து தூய்மையான பசுமையான கட்டுமானத்தில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசியஅவர், உள்நாட்டில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ் கட்டுமான துறையில் நாடு தற்போது வளர்ச்சியடைந்து வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖

கடல்சார் பயிற்சி

இந்திய ஆப்பிரிக்க கூட்டு கடல்சார் பயிற்சியை மத்திய பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு.சஞ்சய்சேத் டான்சானியாவில் இன்று தொடங்கி வைத்தார்.

வரும் 18-ம் தேதிவரை நடைபெறும் இப்பயிற்சியில் ஒருங்கிணைந்த கடல்சார் பாதுகாப்பு, தடையற்ற பாதுகாப்பான போக்குவரத்து, பிராந்திய கடல்சார் சவால்களுக்கு தீர்வு காணும் அம்சங்கள் இடம்பெறும்.

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் தொலைநோக்கு திட்டத்தின்கீழ் இந்திய பெருங்கடல் பகுதிகளில் உள்ளடக்கிய பரஸ்பர வளர்ச்சியை உறுதிசெய்யும் இந்நடவடிக்கையில் இந்திய கடற்படையின் INS சென்னை, INS கேசரி, INS சுனாய்னா கப்பல்கள் பங்கேற்றுள்ளன.

❖❖❖❖❖❖

முதலமைச்சர்

சமூக சீர்த்திருத்தவாதி B.P. மண்டலின் நினைவுநாளை ஒட்டி முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவருக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

சமூக வளைதளத்தில் அவர் வெளியிட்ட செய்தியில் பிற்படுத்தபட்ட வகுப்பினரின் முன்னேற்றத்திற்கான போராட்டத்தில் அன்னாரது பங்கு நினைவுக்கூறத்தக்கது என கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖

சேகர்பாபு

தமிழகத்தில் கோவில்களின் வைப்புத்தொகை வருமானத்தை கொண்டு திருப்பணிகள் விரைந்து முடிக்கப்படும் என மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி ஸ்ரீதேவி - பூதேவி சமேத ஸ்ரீவைகுண்டபதி பெருமாள் திருக்கோவில் குடமுழுக்கு பணிகளை இன்று நேரில் ஆய்வுசெய்த அவர், காலதாமதத்திற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு, பணிகளை விரைந்து முடிக்க தேவையான கூடுதல் நிதி வழங்கப்படும் என்றார்.

9 ஆண்டுகளாக இத்திருக்கோவிலில் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் இந்த ஆண்டு இறுதிக்குள் குடமுழுக்கு நடைபெறும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி.கீதாஜீவன் இந்துசமய அறநிலையத்துறை ஆணையர் திரு. ஸ்ரீதர் உள்ளிட்டோர் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖

டி.ஆர்.பி.ராஜா

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட நீர்நிலைகளில் 3 கோடியே 30 லட்ச ரூபாய் செலவில் தூர்வாரும் பணிகளை மாநில தொழில்துறை அமைச்சர் திரு.டி.ஆர்.பி.ராஜா இன்று தொடங்கிவைத்தார்.

காஞ்சிகுடிக்காடு பகுதியில் நடைபெற்ற தூர்வாரும் பணிகளை அமைச்சர் நேரில் ஆய்வுசெய்தார்.

தொடர்ந்து மேலவாசலில் புதிய நியாயவிலை கடையையும் அமைச்சர் திறந்துவைத்தார்.

❖❖❖❖❖❖

குருத்தோலை ஞாயிறு

கிறிஸ்தவர்களின் தவக்காலத்தின் முக்கிய நாளாக கருதப்படும் குருத்தோலை ஞாயிறு இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி நாகை வேளாங்கண்ணி பேராலயம், தூத்துக்குடி பனிமயமாதா, கன்னியாகுமரி கோட்டார் புனித சவேரியார் தேவாலயம், பூண்டிமாதா பசிலிக்கா உட்பட அனைத்து தேவாலயங்களிலும் குருத்தோலை பவனியுடன் சிறப்பு திருப்பலிகளும் நடைபெற்றன.

வேளாங்கண்ணி பேராலயத்தில் தமிழ் மலையாளம் கொங்கனி உள்ளிட்ட மொழிகளில் சிறப்பு திருப்பலிகள் நடைபெற்றன.

நெல்லை பாளையங்கோட்டையில் நடைபெற்ற பவனியில் ஏராளமானோர் குருத்தோலைகளை ஏந்தி சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

தவக்காலத்தின் நிறைவாக வரும் 20-ம் தேதி ஈஸ்டர் பண்டிகை கொண்டாடப்பட உள்ளது.

❖❖❖❖❖❖

திற்பரப்பு வாய்ஸ்

கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு அருவியில் நீர்வரத்து அதிகரித்ததையடுத்து சுற்றுலா பயணிகள் அங்கு குவிந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

முத்ரா வாய்ஸ்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிரதம மந்திரியின் முத்ரா யோஜனா திட்டத்தின் கீழ் கடந்த 10 ஆண்டுகளில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு கடனுதவி வழங்கப்பட்டதாக மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. திலிப் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

உப்பு சத்தியாகிரகம் வாய்ஸ்

உப்பு சத்தியாகிரக பாதையாத்திரை நினைவு தினம் இன்று கடைப்பிடிக்கப்படுகிறது.

பள்ளி கல்லூரி மாணாக்கரிடையே சுதந்திர போராட்ட வீரர்களின் தியாகங்களை கொண்டு செல்லும் வகையில் நினைவு சின்னங்களை பார்வையிட வகை செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு வேதாரண்ய உப்பு சத்தியாகிரக விழிப்புணர்வு இயக்கத்தின் மாநில பொதுச்செயலாளர் திரு. கே.சுப்பிரமணியன் வலியுறுத்தியுள்ளார்.

.. வாய்ஸ் ..

திருச்சி இரயில் சந்திப்பில் உள்ள உப்பு சத்தியாகிரக நினைவு ஸ்தூபியில் இன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

❖❖❖❖❖❖

இருவரி

திருச்சியில் மண்டல அளவிலான அஞ்சல் சேவை குறைதீர்முகாம் வரும் 22-ம் தேதி நடைபெறவுள்ள நிலையில் நுகர்வோர்கள் தங்கள் கோரிக்கைகளை வரும் 16-ம் தேதிக்குள் அனுப்புமாறு மத்திய மண்டல அஞ்சல்துறை தலைவர் தெரிவித்துள்ளார்.

தஞ்சை அரண்மனை வளாகத்தில் பிரசித்திபெற்ற தஞ்சை ஓவியசந்தை இன்றும் நாளையும் நடைபெறுகிறது.

இதில் பள்ளி கல்லூரி மாணாக்கருக்கான ஓவிய போட்டிகள் மற்றும் சிற்ப செயல்முறை விளக்கம், ஓவிய பிரதிமை உருவாக்கம் உள்ளிட்டவைகள் குறித்து எடுத்துரைக்கப்படும்.

சேலம் மாவட்டத்தில் பெய்த கோடை மழையால் ஜெகரண்டா மலர்கள் பூத்துக் குலுங்குவதை அடுத்து ஊதா காடாக காட்சியளிக்கும் ஏற்காட்டில் சுற்றுலா பயணிகள், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

❖❖❖❖❖❖

கோவில்

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி ஹரிக்கிருஷ்ண பெருமாள் திருக்கோவில் பிரம்மோற்சவ விழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

முக்கிய நிகழ்ச்சிகளான தேரோட்டம் 19-ம் தேதியும், தெப்போற்சவம் 23-ம் தேதியும் நடைபெறும்.

❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் ஜெய்ப்பூரில் இன்றுபிற்பகல் மூன்றரை மணிக்கு ராஜஸ்தான் ராயல்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருவை எதிர்கொள்கிறது.

டெல்லியில் இரவு ஏழரை மணிக்கு நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் டெல்லி கேப்பிட்டல்ஸ் - மும்மை இண்டியன்ஸுடன் மோதுகிறது.

❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.